## பாடம் - 2
## மறுமைநாளின் சட்டங்கள் தொடர்ச்சி

## الدرس الثاني
## تابع من أحكام اليوم الآخر

**மரணம் தொடர்பான செய்திகளின் தொடர்ச்சி**

**2.**மனிதனின் வாழ்நாள் பற்றிய விஷயம் மறைவானதாகும். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அதனை அறிய முடியாது. எனவே யார் எப்போது எந்த இடத்தில் மரணமடைவார் என்பதை யாரும் அறிய முடியாது. திண்ணமாக இது அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரிந்த மறைவான ஞானங்களுள் ஒன்றாகும்.

**3.**மரணம் வந்துவிட்டால் அதைத் தடுக்கவோ பிற்படுத்தவோ அதை விட்டும் வெருண்டோடவோ முடியாது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَلِكُلِّ أُمَّةٍ أَجَلٌ فَإِذَا جَاءَ أَجَلُهُمْ لَا يَسْتَأْخِرُونَ سَاعَةً وَلَا يَسْتَقْدِمُونَ ﴾ [الأعراف:٣٤]

‘ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு தவணை உள்ளது. அவர்களின் தவணை வந்துவிட்டால் சிறிது நேரம் அவர்கள் பிந்தவும் மாட்டார்கள், முந்தவும் மாட்டார்கள்.’ (7:34)

**4.**ஒரு முஃமினுக்கு (ஏக இறைவனை நம்புபவனுக்கு) மரணம் வந்துவிட்டால் நறுமணம் வீசுகின்ற அழகிய தோற்றத்துடன் மலக்குல் மௌத்- எனும் உயிரைக் கைப்பற்றும் வானவர் அவனிடம் வருகிறார். அவருடன் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறும் அருளுக்குரிய வானவர்களும் வருகிறார்கள்.

﴿ إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللهُ ثُمَّ اسْتَقَامُوا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلَائِكَةُ أَلَّا تَخَافُوا وَلَا تَحْزَنُوا وَأَبْشِرُوا بِالْجَنَّةِ الَّتِي كُنْتُمْ تُوعَدُونَ ﴾

[فصِّلت:٣٠]

அல்லாஹ் கூறுகிறான்:‘எங்கள் இறைவன் அல்லாஹ் தான் என்று கூறி பின்னர் உறுதியாகவும் இருந்தோரிடம் வானவர்கள் இறங்கி, அஞ்சாதீர்கள், கவலைப்படாதீர்கள், உங்களுக்கு வாக்களிக்கப் பட்ட சொர்க்கம் குறித்து மகிழ்ச்சியடையுங்கள்.’ எனக் கூறுவார்கள். (41:30)

ஆனால் காஃபிருக்கு (ஏக இறைவனை மறுப்பவனுக்கு) மரணம் வந்தால் நாற்றமுள்ள கருமுகமுடைய, பயமுறுத்தும் தோற்றமுள்ள வானவர் வருவார். வேதனை பற்றி எச்சரிக்கை செய்யக்கூடிய வானவர்களும் அவருடன் வருவார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَلَوْ تَرَى إِذِ الظَّالِمُونَ فِي غَمَرَاتِ الْمَوْتِ وَالْمَلَائِكَةُ بَاسِطُو أَيْدِيهِمْ أَخْرِجُوا أَنْفُسَكُمُ الْيَوْمَ تُجْزَوْنَ عَذَابَ الْهُونِ بِمَا كُنْتُمْ تَقُولُونَ عَلَى اللهِ غَيْرَ الْحَقِّ وَكُنْتُمْ عَنْ آيَاتِهِ تَسْتَكْبِرُونَ ﴾ [ الأنعام:٩٣]

‘அநியாயக்காரர்கள் மரண வேதனைகளில் இருக்கும்போது நீங்கள் அவர் களைப் பார்த்தால், வானவர்கள் தம் கைகளை நீட்டி உங்கள் உயிர்களை வெளியேற்றுங்கள். இன்று இழிவு தரும் வேதனைதான் உங்களுக்கு கூலியாக வழங்கப்படும். ஏனெனில் நீங்கள் அல்லாஹ்வின் மீது உண்மை அல்லாத வற்றைக் கூறிக்கொண்டிருந்தீர்கள். இன்னும் அவனது வசனங்களை (ஏற்பதை) விட்டும் பெருமை அடித்துக் கொண்டிருந்தீர்கள் (என்று கூறுவார்கள்).’ (6:93)

எனவே மரணம் வந்து விட்டால் உண்மை நிலை வெளிப்பட்டுவிடும். எல்லா மனிதர்களுக்கும் அவர்களது விஷயம் தெளிவாகிவிடும்.

﴿حَتَّى إِذَا جَاءَ أَحَدَهُمُ الْمَوْتُ قَالَ رَبِّ ارْجِعُونِ ، لَعَلِّي أَعْمَلُ صَالِحًا فِيمَا تَرَكْتُ كَلَّا إِنَّهَا كَلِمَةٌ هُوَ قَائِلُهَا وَمِنْ وَرَائِهِمْ بَرْزَخٌ إِلَى يَوْمِ يُبْعَثُونَ﴾ [ المؤمنون:٩٩-١٠٠]

அல்லாஹ் கூறுகிறான்: ‘முடிவில் அவர்களில் யாருக்கேனும் மரணம் வரும் போது, என் இறைவனே! நான் விட்டு வந்ததில் நல்லறம் செய்வதற்காக என்னைத் திருப்பி அனுப்புங்கள்! என்று கூறுவான். அவ்வாறில்லை! இது அவன் கூறும் (வாய்) வார்த்தைதான். அவர்கள் எழுப்பப்படும் நாள் வரை அவர்களுக்குப் பின்னால் திரை உள்ளது.’ (23:99,100)

எனவே மரணம் வந்துவிட்டால் (ஏக இறைவனை) நிராகரித்தோரும் (ஏக இறைவனுக்கு) மாறுசெய்தோரும் நல்லறங்கள் செய்வதற்காக உலகத்திற்குத் திரும்ப வருவதை விரும்புவார்கள். எனினும் காலம் கடந்த பிறகு கைசேதப் படுவது எந்தப் பலனும் அளிக்காது.

﴿وَمَنْ يُضْلِلِ اللهُ فَمَا لَهُ مِنْ وَلِيٍّ مِنْ بَعْدِهِ وَتَرَى الظَّالِمِينَ لَمَّا رَأَوُا الْعَذَابَ يَقُولُونَ هَلْ إِلَى مَرَدٍّ مِنْ سَبِيلٍ﴾ [الشُّورى:٤٤]

‘அநியாயக்காரர்கள் வேதனையைக் காணும்போது ஷதப்பிக்க ஏதும் வழி உண்டா?0 எனக் கூறுவதை நீர் காண்பீர்.’ (42:44) என அல்லாஹ் கூறுகிறான்.

5. மரணிப்பதற்கு முன் யாருடைய கடைசி வார்த்தை 'லாஇலாஹ இல்லல்லாஹ்" என்றாகிவிடுகிறதோ அவர் சொர்க்கம் செல்வார் என்பது அல்லாஹ் தன் அடியார்களுக்குச் செய்த கிருபையாகும்.

عَنْ مُعَاذِ بْنِ جَبَلٍ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ : مَنْ كَانَ آخِرُ كَلَامِهِ لَا إِلَهَ إِلَّا اللهُ دَخَلَ الْجَنَّةَ . (د/ ٣١١٦)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவ்வுலகில் ஒருவனின் கடைசி வார்த்தை ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ என்றாகிவிடுமானால் அவன் சொர்க்கம் செல்வான். (அபூதாவூது-3116)

ஏனெனில் அந்த கஷ்டமான நேரத்தில் இந்த வார்த் தையைச் சொல்வதற்கு எந்த மனிதனாலும் முடியாது - அந்த வார்த்தை விஷயத்தில் தூய்மையாக நடந்து கொண்டவனைத் தவிர! அந்த விஷயத்தில் தூய்மையாக நடந்து கொள்ளாதவன் மரண வேதனையில் அவனுக்கு ஏற்பட்டுகின்ற சிரமத்தால் இவ்வார்த்தையைச் சொல் வதற்கு அவனுக்கு கவனம்வராது. எனவேதான் மரண வேளையை அடைந்தவனுக்கு அங்கு இருக்கக்கூடிய வர்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதைச் சொல்லிக் கொடுப்பது நபிவழியாகும்.

عن أَبِي سَعِيدٍ قال قَالَ رَسُولُ اللهِ ﷺ لَقِّنُوا مَوْتَاكُمْ لَا إِلَهَ إِلَّا اللهُ (م/ ٩١٦)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ‘உங்களில் மரண வேளையை அடைந்த வருக்கு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லிக் கொடுங்கள்’(முஸ்லிம்-916) ஆனாலும் அவரை வற்புறுத்தாமல் இருக்க வேண்டும். ஏனெனில் அவர் சங்கடப்பட்டு பொருத்தமில்லாத வார்த்தையைச் சொல்லிவிடக் கூடாது.